செ.வெ.எண்:38 நாள்:24.05.2018

**தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள அஞ்சத்தினை போக்கி, இயல்பு நிலையை அடைய ஹோட்டல் சங்கத்தின் நிர்வாகிகள் ஆகியோர் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்கவேண்டும்.**

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஹோட்டல் சங்கத்தின் நிர்வாகிகளுடன் நடைபெற்ற கலந்தாலோசனைக்கூட்டத்தில்**

**போக்குவரத்துதுறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பி.டபிள்யூ.சி.டேவிட்தார் இ.ஆ.ப., அவர்கள், வேளாண்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன் தீப் சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள், ஆகியோர் வேண்டுகோள்.**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் உத்தரவின்படி, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள நிலைமையே கண்காணிக்கவும், இயல்பு நிலை அடைய மேற்கொள்ளவேண்டிய பணிகளை கண்காணிக்கவும், தமிழ்நாடு அரசால், போக்குவரத்துதுறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பி.டபிள்யூ.சி.டேவிட்தார் இ.ஆ.ப., அவர்கள், வேளாண்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள், ஆகியோர்களை கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

அதனைத்தொடர்ந்து, போக்குவரத்துதுறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பி.டபிள்யூ.சி.டேவிட்தார் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் வேளாண்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன் தீப் சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள், ஆகியோர் மாவட்டங்களில் பல்வேறு இடங்களுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து வருகிறார்கள். குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்டெர்லைட் தாமிர உருக்காலைக்கு எதிராக நடைபெற்ற விவகாரத்தில் காயமடைந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சென்று, காயமடைந்த நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதோடு, உரிய மருத்துவ சிகிச்சைகள் அளித்திட மருத்துவர்களுக்கு அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள். மேலும், மருத்துவமனை அருகில் உள்ள **அம்மா உணவகத்தினை 24 மணி நேரமும் திறந்து வைத்து,** பொதுமக்களுக்கு உணவு கிடைத்திடும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், **பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும்** தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் (24.05.2018) போக்குவரத்துதுறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பி.டபிள்யூ.சி.டேவிட்தார் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் வேளாண்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன் தீப் சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தூத்துக்குடி மாவட்டத்தில் இயல்பு நிலை அடைய மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து, ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் தென்மண்டல் ஐஜி திரு.சைலேஸ் யாதேவ் இ.கா.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.முரளி ரம்பா இ.கா.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.தெ.தியாகராஜன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் போக்குவரத்துதுறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பி.டபிள்யூ.சி.டேவிட்தார் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் வேளாண்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன் தீப் சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் **இயல்பு நிலை அடையவும், பொதுமக்களுக்கு சிறப்பு ஆவின் பாலகங்கள் ஏற்படுத்தி, அதன் மூலம் அனைவருக்கும் பால் கிடைக்கவும்,** உணவு தயாரிப்பதற்கு காய்கறிகள் ஆகியவற்றை கிடைத்திட, இணைப்பதிவாளர் (கூட்டுறவுத்துறை) திரு.அருள்அரசன் அவர்களிடம் ஆலோசனைகள் மேற்கொண்டு, **பண்ணை பசுமை காய்கறி கடை, தெருக்களில் உள்ள கூட்டுறவுத்துறை சங்கத்தின் கட்டுபாட்டிலுள்ள கடைகள் மற்றம் நடமாடும் காய்கறி கடைகள் மூலம் காய்கறிகள்** விற்பனை செய்வது குறித்து கலந்தாலோசனை செய்யப்பட்டு, உடனடியாக கடைகள் திறந்து வைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இணைப்பதிவாளர் (கூட்டுறவுத்துறை) அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

**இன்று (24.05.18) 11,200 லிட்டர் (100 சதவீதம்) பால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.** காய்கறி மொத்த வியாபாரிகள் தங்களது கடைகளை திறந்து வைப்பதாக உறுதியளித்துள்ளார்கள். பொது மக்கள் பயன்பாட்டிற்காக **180 புறநகர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.** எனவே, பொது மக்கள் தங்களுக்குத் தேவையான காய்கறிகள் மற்றும் உணவுப்பொருட்கள் தடையின்றி கிடைத்திட மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

தொடர்ந்து ஹோட்டல் சங்க நிர்வாகளுடன், ஆலோசனை மேற்கொண்ட கண்காணிப்பு அலுவலர்கள், பொதுமக்களுக்கு உணவு கிடைத்திடும் வகையில், உணவகங்களை திறந்து வைத்திட நடடிவக்கைகள் மேற்கொள்ளுமாறும், தங்களது கட்டுபாட்டில் உள்ள சங்க நிர்வாகிகளுடன் பொதுமக்களின் நிலைமையே குறித்து எடுத்துக்கூறி, அவர்களையும் உணவங்களை திறந்து வைப்பதோடு மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என போக்குவரத்துதுறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பி.டபிள்யூ.சி.டேவிட்தார் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் வேளாண்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன் தீப் சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள், ஆகியோர் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில், ஹோட்டல் சங்க தலைவர் திரு.செந்தில் ஆறுமுகம், பானுபிருந்தாவனம் உணவகத்தின் நிர்வனர் திரு.மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**